தெரிவித்தார்கள். ஊதிய உயர்வு கேட்டு வீவிங் பிரிவில் வேலே பார்க்கக் கூடியவர்கள் மட்டும் வேலே நிறுத்தம் செய்ததற்கு மற்ற ஸ்பின்னிங் பிரிவில் வேலே செய்யக்கூடிய தொழிலாளர்களேயும் 'லே ஆஃபில் வீட்டுக்குப் போங்கள், சம்பளம் கிடையாது' என்று மில் முதலாளி கூறியதன் காரணமாகத்தான் 6,000 தொழிலாளர்கள் வேலே நிறுத்தத்தில் ஈடுபடவேண்டிய சூழ்நிலே ஏற்பட்டது. இதிலே டெபுடி கமிஷனர் மூலம் சமரசப் பேச்சு நடத்தி முடிவு காணுவது கஷ்டமானதாகத் தெரிய வருகிறது. டெபுடி லேபர் கமிஷனர் அவர்களுடன் திருச்சியில் சமீபத்தில் நடக்க இருக்கின்ற பேச்சு வார்த்தையின்போது அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டு சீக்கிரமாக மில் தொழிலாளர்கள் வேலேக்குச் செல்லக்கூடிய அளவில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஸ்பெஷல் டெபுடி கமிஷனர் அவர்கள் சமரசப் பேச்சு நடத்துவதற்காக அனுப்பப்பட்டிருக் கிறார்கள். அதிலே வெற்றி பெறத் தாமதம் ஏற்படுமானால் விரைவில் இந்த வேலே நிறுத்தத்தை முடிக்க ஆணையர் அவர்களே அழைப்ப எண்ணி இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள் கிறேன்.

(ஆ) அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள மருத்துவ விடுதிகளுக்கு மருந்து வழங்கப்படாதது குறித்து

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலேவர் அவர்களே, திருநெல் வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உள்ள மருத்துவ விடுதிகளுக்கு 1972-73, 1973-74ம் வருடத்திற்கு எவ்வித மருந்தும் வழங்கப்படாததால். மருத்துவர்கள் கிராம மக்களுக்குத் தேவையான பணிகளேச் செயலாற்ற முடியாமல் இருந்து வருகின்ற நிலேபற்றிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலேவர் அவர்களே, கிராமப் புற மக்களுக்கு மருத்துவ வசதிகளே அளிப்பதற்கு அந்தந்த ஊராட்சி ஒன்றியங்கள் ஒரு பகுதி பொறுப்பு வகிக்கின்றன. ஊராட்சி ஒன்றியங்கள் முறையான மருந்தகங்களே நடத்தி வருகின்றன. இந்த மருந்தகங்களே நடத்த ஊராட்சி ஒன்றியங்கள்

1973 நவம்பர் 28] [திரு. க. அன்பழகன்]

நிதிகளை வழங்குகின்றன. தற்போதுள்ள விதிகளின்படி, கிராமத்தில் (முற்பகலில் மட்டுமே திறந்து வைக்கப்பட்டிருக்கும்), மருந்தகத்தைப் பொறுத்தவரையில், மருந்துகள் வாங்குவதற்காக ஆண்டொன்றுக்கு ரூ. 2,500ம் காலையிலும் மாலையிலும் திறந்து வைக்கப்பட்டிருக்கிற முறையான மருந்தகத்தைப் பொறுத்த மட்டில் மருந்துகள் வாங்குவதற்காக ஆண்டொன்றுக்கு ரூ. 5,000மும் அநதந்த ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்க வேண்டும். அவசரக் காலங்களில் உள்ளூரில் மருந்துகள் வாங்குவதற்காக வரையறுக்கப்பட்டிருந்த செலவு வரம்பாகிய ரூ. 300-ஐ ரூ. 1,000 ஆக உயர்த்தி மக்கள் நல் வாழ்வுத் துறையின் 11—6—1964 ஆம் நாளிட்ட 1365 ஆம் எண் ஆணையில் அரசு ஆணைகளைப் பிறப்பித்தது.

1972-73, 1973-74 ஆம் ஆண்டுகளில் மருந்துகள் வழங்கியது குறித்துத் தொகை செலுத்தும் முறையின்கீழ் சென்னை, மருந்துப் பண்டகசாலை டெபுடி அசிஸ்டண்ட் டைரக்டர் ஜெனரலுக்கு, அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம் முன்தொகை செலுத்த வில்லையென்றும் மருந்துகள் வாங்குவதற்காக ஒவ்வோர் ஆண்டும் (1972-73) வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படுகிற ரூ. 1,000 போதுமானதாக இல்லையென்றும் இந்த வரம்பிற்கு மேற்பட்டு உள்ளூரில் மருந்துகள் வாங்க மருத்துவரால் முடியவில்லையென்றும் திருநெல்வேலி, மாவட்ட மருத்துவ அதிகாரி கூறியதாக சுகாதாரப் பணிகள் குடும்பநலத்திட்ட இயக்குநர் தெரிவித் துள்ளார்.

வரையறுத்துள்ளவாறு, மருந்துகள் வாங்க வரவு-செலவுத் திட்டத்தில் போதிய நிதியை ஊராட்சி ஒன்றியம் ஒதுக்கவில்லை என்பதும், மருந்துப்பொருள் பண்டகத்திற்கு முன்னதாகத் தொகை செலுத்தவில்லையென்பதும் மேற்கண்டவற்றிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. எனவே, மருந்துகள் வழங்குவதில் சிறிது இடர்பாடு ஏற்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் சீர்கேடான நிலையில் பேணி வரப்படுவதாகவும், பெரும்பாலான மருந்தகங்களில் போதிய அளவு மருந்துகள் இருப்பில் இல்லையென்றும் இந்தக் குறைபாடுகள் காரணமாகப் பல மருந்தகங்களை அரசு மருந்தகங் களாக ஆக்கவேண்டுமென்றும் பல முறையீடுகள் வந்துள்ளன வென்றும் ஈண்டு குறிப்பிடலாம். போதுமான அளவு மருந்துகள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்து

கொள்ளவும் மருந்துகள் வாங்கும் நடைமுறையைச் சீர்செய்யவும் ஒரு திட்டம் தயாரிக்கப்படவேண்டுமென்பதுபற்றி ஆய்வு செய்யப்பட்டது. மக்கள் நலத் துறையே மருந்துகளை வாங்கி இருப்புகட்டி ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் தேவைப்பட்டியலை அனுப்புவதன்மேல் அவற்றிற்கு மருந்துகள் வழங்க இத்திட்டம் வகை செய்கிறது. மேற்கண்ட செயற்குறிப்பு ஓரளவு நிவாரணம் அளிக்கக்கூடிய ஒரு திட்டமாக மட்டுமே இருக்குமென்றும் இது முற்றிலும் பயனளிக்கும் திட்டமாக இருக்காது என்றும், ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களைப் படிப்படியாக மூன்று முதல் ஐந்தாண்டுகளில் அரசு மருந்தகங்களாக மாற்றுவதனால் மட்டுமே இச்சிக்கலுக்கு உண்மையில் தீர்வு காணமுடியும் என்றும் உணரப் பட்டது. இத்திட்டத்தில் முதற்கட்டமாக, 1972-73-ல் 45 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் அரசினால் எடுத்துக்கொள்ளப்பட்டன. நடப்பாண்டில் மேலும் 17 மருந்தகங்களை மேற்கொள்ளத் திட்ட மிடப்பட்டுள்ளது. மற்றொரு தொகுதி மருந்தகங்கள் 1974-75-ல் மேற்கொள்ளப்படும்.

உள்ளாட்சி மன்றங்கள் அவசரக்காலங்களில் உள்ளூரில் மருந்துகள் வாங்குவதற்காக வரையறுக்கப்பட்ட செலவு வரம்பை ஆண்டொன்றுக்கு ரூ. 1,000 லிருந்து ரூ. 3,000 ஆக உயர்த்த அரசு தற்போது திட்டமிட்டுள்ளது.

மேற்கூறிய காரணங்களை முன்னிட்டு இதுபற்றி மன்றத்தில் இப்போது விவாதிக்கத் தேவையில்லை.

திரு. ச. சங்குமுத்து தேவர் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது நிதிநிலை உத்தேசித்து பணம் ஒதுக்கவில்லை என்று சொன்னார்கள். கமிஷனர் அவர்களை நான் கேட்கும்போது இதற்குரிய பணத்தை நாங்கள் கட்டியிருக்கிறோம், மருந்து கிடைக்கவில்லை என்று என்னிடம் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, விரைவில் மருந்துகள் கிடைப்பதற்கு உடனடியாக உத்தரவு பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : முன்பணம் செலுத்த வில்லை. டெப்டி அஸிஸ்டென்ட் டயரக்டர் ஜெனரல், மத்திய அரசு சார்பில் சென்ட்ரல் ட்ரக் ஸ்டோர் இருக்கிறது, முன் தொகை செலுத்தாததால் அனுப்பமுடியவில்லை என்று தெரிவித்திருக்

கிறார்கள். இரண்டாவதாக, ஒரு ஆண்டு அவசரத் தேவைக்கு ஆயிரம் ரூபாய்க்குத்தான் மருந்துகள் வாங்கலாம் என்ற ஒரு விதி இருக்கிறது. அது காணாது என்ற கருத்தும் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசுகிற நேரத்தில் [*] என்ற வார்த்தையை உபயோகித்திருக்கிறார்கள். அது பாராளுமன்ற நடைமுறைக்கு ஒத்த வார்த்தையாக இல்லை என்று நான் கருதுவதால் அதை நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

5. அறிவிப்பு

தமிழ்நாடு 1973-ம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு, 1973-ம் ஆண்டு, கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1973-ம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவை இப்பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இச்சட்ட முன் வடிவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.